# ஆயர் மடல் . . .

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கடந்த நாட்கள் முழுதும் நம்மை கருத்துடன் காத்த கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

கடந்த மாதம் 24-ம் தேதி வெள்ளி அன்று நடைபெற்ற ஆண்கள் ஐக்கிய சங்க ஆராதனை சிறப்பாக நடைபெற உழைத்த, பங்கெடுத்த அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

இம்மாதத்தில் 2017-ம் ஆண்டிற்கான **VBS** ஊழியம் வரும் **25-ம்** தேதி(சனி) முதல் தொடங்கி **31-ம்** தேதி (வெள்ளி) வரை 7 நாட்கள் நடத்த திட்டமிட்டிருக்கிறோம். இந்த ஆண்டு சிறப்பாக **VBS-DIRECTORS** ஆக **திரு.டேனியல்**(Asst.Junior Church Director – DMR),**திரு.ஜோசப் பால்சிங்**(Asst.Youth Director – DMR) ஆகியோர் ஊழியத்தை நடத்த வருகிறார்கள்.

இந்நாட்களில் நடைபெறும் இந்த ஊழியத்திற்காக ஜெபிக்கவும் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்ளவும் அன்போடு வேண்டுகிறேன். **VBS** ஊழியத்தின் **Coordintor** ஆக **திரு.ஜேசன் சாமுவேல்** செயல்படுவார்கள், **Teachers** மற்றும் **Volunteers** ஆக ஊழியத்தில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் உற்சாகத்தோடு முன்வர அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தபசு காலங்களில் **புதன்தோறும் இரவு 8** மணிமுதல் நடைபெறும் சிறப்பு **தியான கூடுகையில்** அனைவரும் உற்சாகமாய் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

நமது சபையின் அங்கத்தினராக **திரு.எசேக்கியேல்** அவர்கள் குடும்பம் இணைந்திருக்கிறார்கள், தொடர்ந்து அந்த குடும்பத்திற்காக சபையாக ஜெபித்துக் கொள்ளுவோம்.

தபசு காலங்களில் உண்மையான மனமாற்றத்தோடு கிறிஸ்துவை நம் வாழ்வின் நல்லெண்ணங்கள், நற்சிந்தனைகளோடு வெளிப்படுத்துவோம். ஜெபஉறவில் தரித்திருப்போம். சத்துருவின் சோதனைகளை கர்த்தர்தரும் பலத்தால் மேற்கொள்வோம்.

**கிறிஸ்துவின் பணியில்**
**அருள்திரு.சே.டேவிட்சன் பால் ஜேக்கப்**

தியானம்

## மூன்று வகைச் சிலுவைகள்

கலா:2:20 கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

இன்றையக் கிறிஸ்தவர்கள் நடுவில் மூன்று வகைச் சிலுவைகள் உலா வருகின்றன. .

**1). கிறிஸ்துவும் வேண்டாம் சிலுவையும் வேண்டாம்:**

கிறிஸ்து இல்லை. யெகோவா ஒருவரே கடவுள். கிறிஸ்து இல்லை என்றால் சிலுவையும் இல்லை. " யெகோவா சாட்சி " கூட்டத்தார் இவ்வாறு கூறுகிறார்கள். ( தொடக்க காலத்தில் " திரித்துவம் - Trinity " இல்லை என்று கூறிய கிறிஸ்தவப் பிரிவினர் இருந்தனர். அவர்கள் இயேசு கிறிஸ்துவை நம்புவதில்லை). அவர்கள் ஆண்டவர் இயேசு கடவுளின் குமாரனாக இவ்வுலகில் , வரலாற்றில் வாழ்ந்தார் என்று நம்புவதில்லை. ஆதலால் அவர்கள் - இயேசுவும் வேண்டாம் , சிலுவையும் வேண்டாம் - என்று கூறுகிறார்கள்.

**2). இயேசு வேண்டும் ஆனால் சிலுவை வேண்டாம்:**

இவ்வைகைக் கிறிஸ்தவர்கள் இயேசுவை நம்பி விசுவாசிக்கிறார்கள். ஆனால் இயேசுவின் பாடு மரணத்தை நம்பி ஏற்பதில்லை. அவர்கள் இயேசுவை துன்பப்படாத, அனைத்து நன்மைகளும் நிரம்பிய கடவுளாக மட்டும் பார்க்கிறார்கள். இயேசுவோடு சிலுவை சும ப்பதை, பிறருக்காகப் பாடுபடுவது போன்றவற்றை விரும்புவதில்லை. மாறாக அவரைச் சகல ஆசீர்வாதங்களின் கடவுளாக காண்கின்றனர். அவர்கள் இவ்வுலகில் வளமான வாழ்வையும் விரும்புகிறார்கள். தங்களுக்கு நல்ல வீடு, ஆண் பிள்ளைகள், நல்ல வேலை, நல்ல சுகம், சொத்து, கார் போன்றவை வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவை அனைத்தும் " கடவுளின் ஆசீர்வாதங்கள் " என்றே நம்புகிறார்கள்.

இவர்களை மகிழ்விப்பதற்காகவே சில ஊழியர்கள், சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஓர் " அழகான கிறிஸ்துவைத்தான்" காட்டுகிறார்களே தவிர , "நாம் விரும்பத்தக்க தோற்றம் இல்லாத" பாடுபடும் இயேசுவைக் காட்டுவதில்லை. அவர்கள் கிறிஸ்தவர்களின்

உள்ளத்தைப் பணத்தினால் நி ரப்புகிறார்களே தவிர ஆவிக்குரிய கனிகளால் நிரப்புவதில்லை.

இத்தகைய கிறிஸ்தவர்கள் நாள் நேரம் பார்ப்பது, சாஸ்திரம் - வாஸ்து பார்ப்பது, குறி கேட்பது , பேய், பிசாசுக்கள் உண்டு என்று நம்புவது , அவற்றை விரட்டுவதற்காகச் சகோதரர்களிடம்போவது, பில்லி சூனியம் நம்புவது, செய்வது போன்ற எல்லா செயல்களையும் தயங்காமல் செய்வார்கள். துன்பு றும் இயேசுவையோ , அவருடைய சிலுவையையோ நோக்கிப் பார்க்க மாட்டார்கள்.

**3). இயேசுவும் வேண்டும் சிலுவையும் வேண்டும்:**

இந்த மூன்றாவது வகைக் கிறிஸ்தவர்கள் இயேசுவையும் அவர்தம் சிலுவையையும் விரும்புகிறார்கள். அவர் தம் சிலுவையைச் சுமந்து கொண்டு ஆண்டவருடன் செல்ல எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் தம் ஆண்டவரிடத்திலிருந்து எந்த ஆசீர்வாத்த்தையும் எதிர்பார் ப்பதில்லை. மாறாக ஆவியின் கனிகள் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதையே விரும்புகிறார்கள்.

இத்தகைய கிறிஸ்தவர்கள் உலகம் முழுவதும் நிறந்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் எகிப்து, சிரியா, துருக்கி, பாலஸ்தீனம், பாகிஸ்தான், பீகார், ஒரிசா, குஜராத், போன்ற பகுதிகளில் வாழும் கிறிஸ்தவ விசுவாசிகள் அனுதினமும் இந்த அனுபவத்தை கடந்து வருகிறார்கள்.

அவர்கள் நமது சாது சுந்தர் சிங், பேராயர் அசரியா, பேராயர் நியூபிகின், அன்னை தெரசா, மிஷனரிகள் ரிங்கிள்தௌபே , வாஷ்பர்ன், கிரஹாம் ஸ்டெயின்ஸ் இன்னும் எண்ணற்றோர் இயேசுவையும் சிலுவையையும் இணைத்து ஒன்றாக தங்கள் வாழ்வில் வெளிப்படுத்தியவர்கள்.

மாரச் மாதம் ஒன்றாம் தேதி முதல் லெந்து நாட்களைக் கொண்டாட விழைகிறோம். இக்காலத்தில் கிறிஸ்துவுக்குச் சான்றாக அவருடன் இணைந்து சிலுவை வாழ்வு வாழ வும் புதிய தீர்மானங்களை செயல்முறைப்படுத்தவும் ஆண்டவர் நம்மை வழிநடத்துவாராக.

# *செயலரிடமிருந்து........*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த ஒருமாதகாலமாக தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியதை நினைத்து அவரை துதிப்போம், ஸ்தோத்தரிப்போம்.

அன்பானவர்களே, கடந்த 10-02-17 அன்று நடைபெற்ற துபாய் SKD திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திர பண்டிகையை அவர்களோடு இணைந்து ஆசரிக்கும் பாக்கியத்தை தந்த தேவனுக்கு நன்றிசெலுத்துவோம். அழைத்த துபாய் SKD திருச்சபையினருக்கும், கலந்துகொண்ட நமது திருச்சபையின் மக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். துபாய் SKD திருச்சபையும் அவர்களது நன்றிகளை கூறிக்கொள்கிறார்கள்.

கடந்த 24-2-17 அன்று நடைபெற்ற ஆண்கள் ஐக்கிய ஆராதனைக்காக தேவனுக்கு நன்றிசெலுத்துவோம். அந்த ஆராதனையின் பொறுப்புகளிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்ட ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்குகிறேன். குறிப்பாக அந்நாளின் தேவசெய்தியை நமக்குத்தந்த அபாதாபி திருச்சபையைச்சார்ந்த Dr.ராஜ்குமார் அவர்கட்கும் நம் திருச்சபையின் சார்பில் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக 24-2-17 அன்று நடந்த ஆராதனையை ஒரு திருமுழுக்கு ஆராதனையாக ஆசரிக்க தேவன் கிருபைபுரிந்தார். அந்நாளிலே நமது திருச்சபையைசார்ந்த திரு.ஜேசன் சாமுவேல், திருமதி.பெட்ரீசியாசாந்தி, அவர்களின் குமாரன் இயோன் ஜெய்டன் சாமுவேல்-க்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. திருச்சபையின் அங்கத்தினராக இணைக்கப்பட்ட இந்த குழந்தை கிறிஸ்துவின் பாதையில் வளர சபையாக நாம் தாங்குவோம் ஜெபிப்போம்.

இந்தமாதம் 25 முதல் 31 வரையிலான நாட்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள VBS-க்காக ஜெபிப்போம். தேவன் தாமே இந்த ஊழியத்தை நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக்கித் தருவாராக.

மேலும் வருகின்ற நாட்களிலும் நமது சபையின் எல்லா நிகழ்வுகளிலும் நாம் யாவரும் உற்சாகத்தோடும், ஜெபத்தோடும் பங்குபெறுவோம், செயல்படுவோம். தேவன்தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையில் வழிநடத்துவாராக.

**M.நேசமணி**

# WORSHIP TIMINGS – MARCH - 2017

## MAIN WORSHIP HALL, OASIS HOSPITAL COMPOUND, AL AIN.

| | | |
|---|---|---|
| 1st & 3rd FRIDAYS | 7.00 pm | *COMMUNION SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 7.00 pm | *EVENING SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 6.30 pm | *BIBLE STUDY* |
| EVERY FRIDAYS | 6.30 pm | *JUNIOR CHURCH* |

## PARSONAGE, AL MUWAIJI

| | | |
|---|---|---|
| 03.03.2017 FRIDAY | 11.30 am | *FASTING PRAYER* |
| 11.03.2017 SATURDAY | 07.30 pm | *WOMEN'S FELLOWSHIP PRAYER CELL* |
| 18.03.2017 SATURDAY | 07.00 pm | *MEN'S FELLOWSHIP PRAYER CELL & CAMP MINISTRY* |
| 31.03.2017 FRIDAY | 11.30 pm | *MONTH END PRAYER* |

# Our Mediator And Advocate

"When you were dead in your sins and in the uncircumcision of your sinful nature, God made you alive with Christ. He forgave us all our sins, having canceled the written code, with its regulations, that was against us and that stood opposed to us; he took it away, nailing it to the cross." – Colossians 2:13-14

In 1957, during the Cold War, attorney James Donovan defended the Soviet spy Rudolf Abel, after many other lawyers refused. Abel was convicted, but Donovan was successful in persuading thecourt not to impose a death sentence.

In 1962, James was asked to be the lead negotiator with Soviet and East German mediators to free captured American pilot Francis Gary Powers. After many days of tough talks, James successfully mediated for the exchange of Powers, along with American student Frederic Pryor, who was held by the East Germans, for the still-imprisoned Rudolf Abel, whom Donovan had defended five years earlier.

In June 1962, his alma mater Fordham put it another way: Upon giving Donovan an honorary degree, the University called him "the most successful American practitioner of metadiplomacy" during the Cold War, someone who could operate above and beyond the usual diplomatic channels to disarm "the world's best jugglers of words and ideas" and win "a striking victory for his country."

Everyone needs "The Advocate and Mediator", Jesus Christ, who cancelled our debt of sins and made things right. Today in prayer, praise the Lord that He intercedes for you.

"Christ's work as Mediator was unique; it was to restore us to divine favor and to make us sons of God, instead of sons of men." – John Calvin

God's Word: "He himself bore our sins in his body on the tree, so that we might die to sins and live for righteousness; by his wounds you have been healed." – 1 Peter 2:24

**Collected by.**
**Mrs.Ceciliya Rajkumar**

# Birthday Celebrants in March – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 01.03.2017 | Mr. David Livingston | 0505432630 |
| 02.03.2017 | Mrs. Vasantha Selvakumari | 0501251782 |
| 02.03.2017 | Mrs.Shaly Jesie | 0563941817 |
| 02.03.2017 | Master.Samuel Rathinam | 0529625261 |
| 03.03.2017 | Mrs.D.Jesubai | 0556400635 |
| 06.03.2017 | Mr. Derick Gasbath Joy | 0506677528 |
| 14.03.2017 | Mrs. Radhika Grace | 0502334421 |
| 15.03.2017 | Mrs. Eben Ashok | 0507834649 |
| 17.03.2017 | Mr. Joseph Jovin | 0553171742 |
| 19.03.2017 | Mr.S.Arun Christo | 0522871567 |
| 23.03.2017 | Baby.Gabrilin U.S.Shasmitha | 0562725446 |
| 25.03.2017 | Mrs.Rebecca Prabhu | 0556281237 |
| 27.03.2017 | Master.Johan Sanjo | 0557309275 |
| 28.03.2017 | Ms. Eastrine Benedicta Raj | 0503227592 |
| 28.03.2017 | Master.Ridhun Yojit | 0558146143 |
| 30.03.2017 | Ms. S.M. Ajin Shah | 0559318750 |
| 30.03.2017 | Mr.Derin David Livingston | 0505432630 |
| 31.03.2017 | Ms. Annlin Sophia Nelson | 0556028865 |

# Wedding Anniversary in March – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 07.03.2017 | Mr. Ujin Raj<br>Mrs. Sangeetha | 0562725446 |

# Bible Wordsearch

## Jesus the Teacher

Wordsearch 254 Matt.10:34-11:3

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S | E | N | O | Y | N | A | F | U | F | P | R | T | E | S |
| L | S | U | P | P | O | S | E | I | R | O | C | Y | D | W |
| G | A | L | I | L | E | E | H | E | N | E | L | L | I | O |
| I | H | E | A | R | D | L | A | R | P | I | U | L | S | R |
| V | E | C | A | E | P | C | P | X | E | O | S | Y | O | D |
| E | T | E | A | C | H | S | E | I | H | T | L | H | A | W |
| S | E | N | O | E | M | O | S | S | C | N | A | U | E | W |
| R | T | S | N | I | A | G | A | O | I | S | G | W | O | D |
| E | E | U | H | V | N | S | T | A | R | H | I | R | A | E |
| B | H | S | T | E | L | O | T | W | T | C | T | D | F | N |
| M | P | E | U | S | T | R | S | E | E | H | T | R | A | E |
| E | O | J | R | A | E | O | R | I | Y | L | V | A | T | M |
| M | R | A | T | C | C | T | W | I | R | O | V | W | H | I |
| N | P | M | O | T | H | E | R | N | I | P | S | E | E | E |
| T | S | I | R | H | C | N | B | E | S | A | R | R | R | S |

| | |
|---|---|
| ANYONE | AGAINST |
| CHRIST | BECAUSE |
| CROSS | CERTAINLY |
| EARTH | DAUGHTER |
| EXPECT | DISCIPLE |
| FATHER | ENEMIES |
| FOLLOW | FINISHED |
| GIVES | GALILEE |
| HEARD | MEMBERS |
| JESUS | MOTHER |
| PEACE | PREACH |
| PRISON | PROPHET |
| SWORD | RECEIVES |
| TRUTH | REWARD |
| TEACH | SHOULD |
| TOWNS | SOMEONE |
| TWELVE | SUPPOSE |
| WATER | WORTHY |



After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

_ _ _ _ _ _ _ _ _ _ _ _

_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

MORE PUZZLES AT:
http://biblewordgames.com

COPYRIGHT 2016 ALL RIGHTS RESERVED

Dear Children, please find these words and circle them, cut this puzzle and hand over to Pastor Uncle on or before 20th March 2017.

**Congrats you have done all**

1) Eastrine
2) Mercy
3) Dennis Roger
4) Shelbino
5) Jesvin
6) Diniya Sunshine
7) Angelin Sophia Nelson
8) Annlin Sophia Nelson
9) Joshua
10) Joshika Varshini
11) Merwin Samuel
12) Gain
13) Roshan

# Daily Bible Reading March – 2017

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)

| Date | Day | Morning | | Evening | |
|---|---|---|---|---|---|
| 1 | Wed | Joshua.10 | யோசுவா.10 | Revelation.12 | வெளி.விசே.12 |
| 2 | Thu | Joshua.11 | யோசுவா.11 | Revelation.13 | வெளி.விசே.13 |
| 3 | Fri | Joshua.12 | யோசுவா.12 | Revelation.14 | வெளி.விசே.14 |
| 4 | Sat | Joshua.13 | யோசுவா.13 | Revelation.15 | வெளி.விசே.15 |
| 5 | Sun | Joshua.14 | யோசுவா.14 | Revelation.16 | வெளி.விசே.16 |
| 6 | Mon | Joshua.15 | யோசுவா.15 | Revelation.17 | வெளி.விசே.17 |
| 7 | Tue | Joshua.16 | யோசுவா.16 | Revelation.18 | வெளி.விசே.18 |
| 8 | Wed | Joshua.17 | யோசுவா.17 | Revelation.19 | வெளி.விசே.19 |
| 9 | Thu | Joshua.18 | யோசுவா.18 | Revelation.20 | வெளி.விசே.20 |
| 10 | Fri | Joshua.19 | யோசுவா.19 | Revelation.21 | வெளி.விசே.21 |
| 11 | Sat | Joshua.20 | யோசுவா.20 | Revelation.22 | வெளி.விசே.22 |
| 12 | Sun | Joshua.21 | யோசுவா.21 | Matthew.1 | மத்தேயு.1 |
| 13 | Mon | Joshua.22 | யோசுவா.22 | Matthew.2 | மத்தேயு.2 |
| 14 | Tue | Joshua.23 | யோசுவா.23 | Matthew.3 | மத்தேயு.3 |
| 15 | Wed | Joshua.24 | யோசுவா.24 | Matthew.4 | மத்தேயு.4 |
| 16 | Thu | Judges.1 | நியாயாதிபதிகள்.1 | Matthew.5 | மத்தேயு.5 |
| 17 | Fri | Judges.2 | நியாயாதிபதிகள்.2 | Matthew.6 | மத்தேயு.6 |
| 18 | Sat | Judges.3 | நியாயாதிபதிகள்.3 | Matthew.7 | மத்தேயு.7 |
| 19 | Sun | Judges.4 | நியாயாதிபதிகள்.4 | Matthew.8 | மத்தேயு.8 |
| 20 | Mon | Judges.5 | நியாயாதிபதிகள்.5 | Matthew.9 | மத்தேயு.9 |
| 21 | Tue | Judges.6 | நியாயாதிபதிகள்.6 | Matthew.10 | மத்தேயு.10 |
| 22 | Wed | Judges.7 | நியாயாதிபதிகள்.7 | Matthew.11 | மத்தேயு.11 |
| 23 | Thu | Judges.8 | நியாயாதிபதிகள்.8 | Matthew.12 | மத்தேயு.12 |
| 24 | Fri | Judges.9 | நியாயாதிபதிகள்.9 | Matthew.13 | மத்தேயு.13 |
| 25 | Sat | Judges.10 | நியாயாதிபதிகள்.10 | Matthew.14 | மத்தேயு.14 |
| 26 | Sun | Judges.11 | நியாயாதிபதிகள்.11 | Matthew.15 | மத்தேயு.15 |
| 27 | Mon | Judges.12 | நியாயாதிபதிகள்.12 | Matthew.16 | மத்தேயு.16 |
| 28 | Tue | Judges.13 | நியாயாதிபதிகள்.13 | Matthew.17 | மத்தேயு.17 |
| 29 | Wed | Judges.14 | நியாயாதிபதிகள்.14 | Matthew.18 | மத்தேயு.18 |
| 30 | Thu | Judges.15 | நியாயாதிபதிகள்.15 | Matthew.19 | மத்தேயு.19 |
| 31 | Fri | Judges.16 | நியாயாதிபதிகள்.16 | Matthew.20 | மத்தேயு.20 |

# *வேத வினா விடைப் போட்டி – 28 ( மார்ச்)*

## ( 1.இராஜாக்கள்.12-22 அதி.)

1. தீர்க்கதரிசிகளை ஒளித்து வைத்து, அப்பமும் தண்ணீரும் கொடுத்து பராமரித்து வந்தவன் யார்?
2. போம் உமக்கு வாய்க்கும் என்று உரைத்தது யார்?
3. முதியோரின் ஆலோசனையை தள்ளிவிட்டது யார்?
4. தன் தகப்பனாகிய தாவீதைப்போல் கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தவன் யார்?
5. பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்கள் எத்தனைபேர் இஸ்ரவேலில் மீதியாயிருந்தார்கள்?
6. அவன் எலும்புகளண்டையில் என் எலும்புகளையும் வையுங்கள் என்றது யார்?
7. அரமனைக்குள் தீக்கொளுத்தி செத்தவன் யார்?
8. உடன்படிக்கை செய்துகொண்ட இராஜாக்கள் யார்?
9. தன் கண்கள் மங்கலடைந்து பார்க்கக்கூடாதிருந்த தீர்க்கதரிசி யார்?
10. நீ அப்பம் புசியாமலும், அங்கே தண்ணீர் குடியாமலும், நீ போன வழியாய்த திரும்பி வராமலும் இரு என்று யாருக்கு உரைக்கப்பட்டது?

***குறிப்பு:*** விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இந்த மார்ச் மாதம் 20–ஆம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

## பிப்ரவரி ***மாத விடைகள்***


1. 1இராஜாக்கள்.5:1
2. 1இராஜாக்கள்.10:1
3. 1இராஜாக்கள்.1:5
4. 1இராஜாக்கள்.3:4
5. 1இராஜாக்கள்.11:28
6. 1இராஜாக்கள்.8:65
7. 1இராஜாக்கள்.2:29,30
8. 1இராஜாக்கள்.6:20

9. 1இராஜாக்கள்.9:23
10. 1இராஜாக்கள்.4:32

## பிப்ரவரி மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
2. திருமதி. பிப்லின் நெல்சன்
3. திருமதி. ஹெலன் கம்பீரம்
4. திருமதி. ஜெயின் ராஜவேல்
5. திருமதி. பிரேமா ரூத் பிரேம்
6. திருமதி. ஷீபா பிரகாஷ்
7. திருமதி. ரூபா எசேக்கியேல்
8. திருமதி. ஜெயந்தா பெல்வர்
9. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

## CARTOON OF THE MONTH




But God demonstrates his own love for us in this: While we were still sinners, Christ died for us. – ROMANS 5:8 NIV

# பெருமை

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்"(யாக்.4:6).

ஜெபத்தை தடுக்கக்கூடிய தீய வல்லமை பெருமையாகும். பரிசேயன் செய்த ஜெபமெல்லாம் சுயநீதியை வெளிப்படுத்துகிறதாகவும், பெருமை மிக்கதாகவும் இருந்தது. " தேவனே, நான் பரியாசக்காரன், அநியாயக்காரன், விபச்சாரக்காரராகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தர் அப்படிப்பட்ட பெருமை நிறைந்த ஜெபங்களை கேட்கிறதும் இல்லை, பதிலளிக்கிறதும் இல்லை.

ஆகவே, ஒரு நாளும் நம்முடைய மேன்மைகளையோ, உயர்வையோ குறித்து, "டமாரம்" அடித்து ஜெபிக்காதிருப்போம். வல்லமையான ஜெபத்திற்க்கு தாழ்மை மிகவும் அவசியம். "என் நாமம் தரிக்கப்படட் என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி" என்று கர்த்தர் சொல்லுகிறார்.(2நாளா.7:14).

ஜெபம் பண்ணும்போது இயேசுவின் தாழ்மையைப்பற்றி சிந்தித்துப் பார்ப்போம். "அவர் தேவனுடைய சாயலாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8).


நம்முடைய ஜெபத்தின் ஆவியும், விண்ணப்பத்தின் ஆவியும் தேவை என்றால், கர்த்தருடைய சமூகத்தில் நம்மை தாழ்த்தி நருங்குண்ட, நொறுங்குண்ட இருதயத்தோடு கேட்ப்போம். "ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயாத்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேதுரு.5:6). அப்பொழுது நிச்சயமாகவே கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்துக்கும் "ஆம் என்றும் ஆமேன் என்றும் பதிலளிப்பார".

ஆகவே நாமும் பெருமையினை துறந்து. கிறிஸ்து என்னும் புதுமையினை தரித்தவர்களாக, கர்த்தருக்காக நம்முடைய அர்ப்பமான வாழ்வினை மேற்க்கொண்டால். தேவ ஆசீர்வாதம் நம்மையும், நம்முடைய குடும்பத்தினரையும், நம்முடைய சமூகத்தையும் ஆசீர்வதிக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

**Mr.நெல்சன் சோபித ராஜ்.**

# YOUTH- CROSSWORD PUZZLES

The Baptism of Jesus - Based on Mark.1:4-11




**ACROSS**

1. What was heard when Jesus was baptized.
5. The river where Jesus was baptized.
7. The Spirit came down from heaven like a ____.
8. To break one of God's commandments.
9. To turn away from sin.

**DOWN**

2. To admit that you have done wrong.
3. To pardon for sins.
4. The liquid used to baptize someone.
5. Name of the man who baptized Jesus.
6. A sticky, sweet fluid made by bees.

---

## Answers for the Previous Month:

Esau, Jacob, Isaac, Hunter, Farmer, Blessing, Stew, Hunger, Hairy, Strong, Birthright, Oldest, Despise, Cattle, Servants.

**Congrats who have done all**

*D.P. Joseph Jovin*

## வேதாகமத்தில் பெண்கள் - உல்தாள்

சல்லும் என்னும் வஸ்திரசாலை விசாரிப்புக்காரன் மனைவியாகிய உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்திற்குப் போய் அவளோடே பேசினார்கள். அவள் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள். அவள் அவர்களை நோக்கி, உங்களை என்னிடத்தில் அனுப்பினவரிடத்தில் நீங்கள் போய் இஸ்ரவேலின் தேவானகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்

2 இராஜாக்கள் 22 : 14,15.

உல்தாள் ஒரு தீர்க்கதரிசி, அவள் சாதாரணமான வீட்டில் வசித்து வந்தாள்.அவளுடைய கணவன் வஸ்திரசாலை விசாரிப்புக்காரன். இராஜா வாசித்த நியாயப் பிரமாண புஸ்தகத்தில் உள்ளதைக் குறித்துப் பேச பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவும் உல்தாளிடம் பேச வந்திருந்தான். இதற்கு காரணம் இவளின் தெய்வபக்தி இராஜா வரைக்கும் தெரிந்து இருந்ததினால் தான். அவள் இராஜாவை பிரியப்படுத்தாமல் கர்த்தர் சொன்னதை உள்ளபடியே இராஜாவிடம் சொல்ல சொல்கிறாள். இந்த வார்த்தையால் இராஜாவும் கர்த்தருக்கு விரோதமாக செய்து வந்த பொல்லாப்புகளை அடியோடு அகற்றி சாம்பலாக்குகிறான்.

அதே உல்தாள் போல நீங்களும் நானும் கூட சாதாரண பெண்ணாக இருக்கலாம். ஆனால் கர்த்தர் உங்களையும் என்னையும் தீர்க்கத்தரிசன ஊழியத்திற்கு அழைத்திருப்பாரானால் நாம் “ கர்த்தர் உரைக்கிறார்” என்று தைரியமாக பேசுகிறோமா? அல்லது மனுஷருக்காக் பயந்து கர்த்தர் கூறியதை திரித்து பேசுகிறோமா? நம் தேவபக்தி எல்லோருக்கும் தெரிகிறதா?

உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். மத்தேயு 5:37

கர்த்தாவே, நீர் சொல்லுகிறது எதுவோ அதன்படி சொல்ல, நடக்க எங்களுக்கு கிருபை புரியும்.ஆமென்.

Mrs.ஜெனிபர் டேவிட்சன்

# Coloring Page for Kids

## Samuel Hears God



**Congrats who have done all**

*1)Jayne 2) Erline Berniceraj 3) Eric Jayden*
*4)Jonathan 5)Geovin 6)Jeremiah*
*6)Jemima 7) Johan Sanjo 8) Ridhun 9) Angelin steffina*

# *சிந்தனைக்கு………*

## அப்போஸ்தலர் பவுலோடு இருந்த தீமோத்தேயு

**“விசுவாசத்தில் உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது.” (1தீமோ.1:2)**

அப்போஸ்தலனாகிய பவுல் பெரும்பாலும் தன்னுடைய நிருபங்களை சபைகளுக்கே எழுதினார். ரோமருக்கு, கொரிந்தியருக்கு, கலாத்தியருக்கு, எபேசியருக்கு, பிலிப்பியருக்கு, கொலோசெயருக்கு, தெசலோனிக்கேயருக்கு என ஒன்பது நிருபங்களை நாம் பார்க்கிறோம். அதேநேரம் அவர் தனிப்பட்டவர்கட்கும் நிருபங்களை எழுதினார். தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் ஆகியோருக்கு நிருபங்களை எழுதினாலும் பவுலோடு அதிகமாக நெருங்கியிருந்தவரும், இணைந்து ஊழியம் செய்தவரும் தீமோத்தேயுவே ஆவார். பவுலை தீமோத்தேயு உண்மையும், உத்தமுமாய் பின்பற்றினபடியால் தீமோத்தேயுவுக்கு வேதத்தில் நீங்காத இடம் கிடைத்தது. பிற்காலத்தில் தீமோத்தேயு மிகவும் அதிகமாய் கர்த்தருக்கு ஊழியம் செய்தான் என்று பார்க்கிறோம்.

தீமோத்தேயுவின் பெயரை முதன்முறையாக அப்.16:1ல் தான் காண்கிறோம். மக்கெதோனியாவிலிருந்து தீமோத்தேயு வந்தபோது, பவுல் ஆவியில் வைராக்கியம் கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்கு திருஷ்டாங்கப்படுத்திக் கொண்டிருந்தவேளை. முதலில் தீமோத்தேயு பவுலுக்கு உதவிசெய்தவர் என்றே குறிப்பிடப்பட்டார் (அப்.19:22). பின்பு பவுலின் உடன் வேலையாளனாகிய தீமோத்தேயு என்றுஅழைக்கப்பட்டார் (அப்.16:21). அதன் பின்பு எனக்கு பிரியமும் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன் என்று பவுல் அழைக்கும் அளவிற்கு மேன்மைபெறுகிறார்(1கொரி.4:17).

தீமோத்தேயுவைக் குறித்து பவுல் சாட்சிகொடுக்கும் போது, “தகப்பனுக்கு பிள்ளை ஊழியம் செய்வதுபோல, அவன் என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியம் செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்” (பிலிப்.2:22) என்று எடுத்துரைக்கின்றார்.

பவுலோடு தீமோத்தேயு இருந்தபடியால் வேதஞானம், வேதத்தின் ஆழம், வேதத்தின் வெளிப்பாடுகளோடுகூட மிகுதியான விசுவாசமும் அவனுக்குள் இருந்தது. மோசேயை பின்பற்றின யோசுவாமேல் மோசே கைகளை வைத்தபோது, அவர் ஞானத்தினால் நிரப்பப்பட்டதுபோல, பவுல் தீமோத்தேயுமேல் கைகளை வைத்தபோது, தீமோத்தேயு ஆவியின் வரங்களைப்

பெற்றுக்கொண்டான். "நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல் மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (2தீமோ.1:6,7) என்றும் பவுல் தீமோத்தேயு ஆவியின் வரங்களால் நிரப்பப்பட்டார் என்பதை தெளிவுபடுத்துகிறார்.


**"உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச் சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்."(2தீமோத்.1:4).**

*M. Nesamony*

## கோதுமை மணி

## மகாராஜன் வேதமாணிக்கம்

சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான் சகலமும்
படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.



கிறிஸ்தவர்கள் அதிகமாய் விரும்பி பாடும் இந்த துதிப் பாடலை எழுதிய அருள் திரு. மகாராஜன் வேதமாணிக்கம். இவர் கன்னியாகுமரி மாவட்டத்தின் முதல் கிறிஸ்தவர் எனும் பெருமைக்குரியவர். வேதமாணிக்கம் தேசிகரை அறியாத மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே இல்லை எனலாம். இந்த மாவட்டம் 18ம் நூற்றாண்டில் திருவிதாங்கூர் மாகாணம் என்று அழைக்கப்பட்டது. அந்த நாட்களில் கல்வியறிவு பெற்றிராத மக்கள் எண்ணிக்கைக்கு அடங்கா கடவுள்களை வழிபட்டு வந்தனர். கீழ் ஜாதி பெண்கள் மேலாடை அணியக் கூடாது. கணவர் இறந்தால் மனைவிகளும் தீயில் விழுந்து மரிக்க வேண்டும் போன்ற பல சிக்கலான சமூக அமைப்புகளையும்,ஜாதிச்சடங்குகளாலும் நிறைந்து காணப்பட்டது இந்த

குமரி மாவட்டம். 19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் கன்னியாகுமரி பகுதிக்கு வந்த போதே சிக்கலான சமூக அமைப்புகள் சுமூகமான விடுதலையைக் கண்டது. நாகரீகமும் நலமான வாழ்வு முறையும் மக்களிடம் துளிர்விட தொடங்கியது. குட்டி தெய்வங்களுக்கு முன் கூனிக்குறுகிக் கிடந்த மக்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் தலை நிமிர ஆரம்பித்தார்கள். பெண்கள் மேலாடை அணிய அனுமதிக்கப்பட்டனர். பல கிறிஸ்தவ தேவ ஆலயங்கள் எழும்பினது. மறைதிரு. W.T. றிங்கல்தௌபே மற்றும் மறைத்திரு சார்லஸ் மீட் போன்ற மிஷனரிகளின் வருகையால் பல்வேறு பள்ளிகளும், கல்லூரிகளும் தோன்றின. ஒரு காலத்தில் படிப்பறிவு பெற்றிராத குமரி மாவட்டம் இன்றைக்கு 87.6 படிப்பறிவு பெற்ற மக்களால் நிரம்பியுள்ளது. இத்தகைய மாபெரும் சமூக உயர்வுக்கு காரணமாய் அமைந்த வேதமாணிக்கம் தேசிகரைப் பற்றி கிறிஸ்தவர்களாகிய நாம் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும்.

1750-ம் ஆண்டுக்கு பின், மதுரநாயகம்-தேவாயி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக மயிலாடி என்ற ஊரில் பிறந்தார் வேதமாணிக்கம். ஐந்து வயதிலேயே தந்தையை இழந்த வேதமாணிக்கத்தை அவரது தாயார் தெய்வ பக்தியில் வளர்த்தார். சிறுவயதிலேயே சிவ பக்தராகவும், உண்மை,ஆன்மிகம் ஆகியவற்றை தேடும் உயர்ந்த நாட்டம் உடையவராகவும் இருந்தார். 1799ம் ஆண்டு சிதம்பரம் என்ற இடத்தை நோக்கி புண்ணிய பயணம் மேற்கொண்டார். கடவுளை சந்தித்தே ஆகவேண்டும் என்ற நோக்கத்துடன் சென்றார், அங்கு நடைபெற்ற வழிபாடுகள், அவருக்கு வெறுப்பையும்,ஏமாற்றத்தையுமே தந்தன. இதனால் மனமுடைந்த அவர் ஓர் தூணில் சாய்ந்து தூங்கிவிட்டார். அப்பொழுது வெண்ணங்கி தரித்த ஒரு தூதன் கனவில் தோன்றி, “நீ செல்ல வேண்டிய இடம் வேறு, புறப்படு, வழிகாட்டுகிறேன்” என்று கூற, அந்த சத்தத்திற்கு கீழ்படிந்து எழுந்து புறப்பட்டார். தஞ்சாவூர் வந்த பொழுது “கோலாப் ஐயர்” மூலமாக மெய் தெய்வமாகிய இயேசுவைப் பற்றி அறிந்து கொண்டார். கனவில் தோன்றிய தூதன் தன்னை சரியான வழியில் நடத்தியிருப்பதை எண்ணி வியப்படைந்தார். சத்தியத்தை அறிந்த அவர் காலம் தாழ்த்தாமல் “கோலாப் ஐயர்” மூலமாக ஞானஸ்நானம் பெற்று புதிய மனிதனானார்.

20-வது வயதில், மத்திகோடு சபையைச் சார்ந்த இராகேலை மணம்புரிந்தார் வேதமாணிக்கம். தனது உயர் படிப்பை முடித்து அரசு அதிகாரியாக வேலையிலமர்ந்தார். பக்தி, விசுவாசம்,மற்றும் சிறப்பாக, ஜெபம் ஆகியவற்றில் அதிக வாஞ்சையுள்ளவராக விளங்கினார். உலகப் பொருளுக்கோ,பணத்திற்கோ மனதில் இடம் கொடாது, மண்தரை போட்ட,ஓலை வேய்ந்த குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார். ஒரு நாள் ஆங்கிலேயரான அவரது மேலதிகாரி, அவரை நோக்கி, “வேத மாணிக்கம், நீ வேதம் ஒத வேண்டியவன்; இங்கு எப்படி வேலை செய்யலாம்?” என்று கேட்டார். இக்கேள்வி வேதமாணிக்கத்தின் உள்ளத்தில் பதிந்தது. ஆழ்ந்து சிந்தித்த வேதமாணிக்கம்,நற்செய்திப் பணியில் கொண்ட ஆர்வத்தால், உடனே அரசு வேலையை இராஜிநாமா செய்து விட்டு, மிஷனில் ஆசிரியராகவும், பின்னர் மிஷன் பள்ளிகளின் ஆய்வாளராகவும் பணியாற்றினார். சிறிது காலம் மத்திகோடு சபை உபதேசியராக ஊழியம் செய்தபின், 1912-ம் ஆண்டு கல்லுக்கூட்டம் திருச்சபைப் போதகரானார். பல பாடல்களை இயற்றி, இன்னிசையுடன் நற்செய்தி அளித்து வந்தார். தன் உறவினர்கள் அனைவருக்கும் கிறிஸ்துவைப் பற்றி அறிவித்து, அவர்களையும் ஞானஸ்நானம் பெற செய்தார். தன்னை ஒறுத்து ஊழியம் செய்த போதகர் வேதமாணிக்கத்தின் ஆலய ஆராதனையில், மக்கள் திரள் கூட்டமாகப் பங்கேற்றனர். அவர் வாலிபர்களை நல்வழிப் படுத்த“சுவிசேஷப் படையெழுச்சி,” என்ற திறந்த வெளிக் கூட்டங்களை நடத்தினார். ஞாயிறு தோறும் மாலை நேரத்தில், பெண்களுக்குச் சிறப்பு வேதப் பயிற்சிக் கூட்டங்களை, வீடுகளில் நடத்தினார். கண்ணியமும், நேர்மையும் நிறைந்த போதகர் வேதமாணிக்கம்,ஊர்ப் பிரச்சனைகளைத் தீர்க்கும் ஊர்க்கூட்ட நடுவராகவும் சமுதாயப் பணி செய்தார். ஆண்டவரின் ஊழியப் பாதையில் தன்னுடையது அனைத்தையும் அர்ப்பணம் செய்த வேதமாணிக்கத்தின் குடும்பத்தை ஆண்டவர் ஆசீர்வதித்தார். அவரது மூன்று பையன்களுக்கும், மூன்று பெண்பிள்ளைகளுக்கும், தேவன் நல்ல படிப்பு, வேலை, மற்றும் இசை ஞானத்தைத் தந்தார். வயலின் தான் அவர்களின் குடும்ப வாத்தியம். அதில் அவர்கள் அனைவரும் மேதைகளாக விளங்கினார்கள். எனவே, குடும்பமாகப் பல இடங்களுக்குச் சென்று, நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக கிறிஸ்துவை அறிவித்து வந்தனர். மேலும் ஜெர்மானிய மிஷனரி W.T.றிங்கல்தெளபே அவர்களை கன்னியாகுமரிக்கு அழைத்து

கிறிஸ்துவ பணியை செய்ய உருந்துனையாக இருந்தார். பின்னர் இங்கிலாந்து மிஷனரி சார்லஸ் மீட் என்பவருக்கும் ஊழியத்தில் துனையாக இருந்தார்.

1827-ம் ஆண்டு, அருள்திரு. வேதமாணிக்கம் மார்த்தாண்டத்திலுள்ள தனது மனைவியின் தங்கை வீட்டிற்குச் செல்ல பஸ்ஸில் ஏறும்போது தவறி விழுந்ததில், பேருந்தின் சக்கரம் அவரது காலில் ஏறிக் காயம் ஏற்பட்டது. அத்துடன் பயணத்தைத் தொடர்ந்த அவர், மார்த்தாண்டத்தில், மூன்றாம் நாளில் மரணமடைந்தார். அவர் இயற்றிய, "ஆ! இன்ப காலமல்லோ" "ஜீவ வசனம் கூறுவோம்,"என்ற பாடல்களும்,திருச்சபைக் கீர்த்தனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இயேசு தமிழ் மக்களை அதிகம் நேசிக்கின்றார் என்பதற்கு வேதமாணிக்கம் தேசிகருடைய வாழ்க்கை ஓர் சான்றாகும். வேதமாணிக்கம் கர்த்தருடைய சமூகத்தில் இளைப்பாறினாலும் அவர் எழுதிய பாடல்கள் இன்றைக்கும் நம்முடைய இருதயத்தில் தவளுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் இன்றைக்கு அதிகளவில் காணப்படுவதற்க்கு வேதமாணிக்கம் தேசிகர் தன்னுடைய வாழ்க்கையை கிறிஸ்துவின் கரத்தில் அர்ப்பணித்தார். நீங்களும் வாழ்கையை கர்த்தரிடம் அர்ப்பணித்து, அவருக்கு பிரியமாய் வாழ்ந்தால் உங்களைகொண்டும் கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்.

ஜெபம்: எங்களை அதிகமாய் நேசித்து வழி நடத்தி வரும் இயேசுவே, உம்முடைய கிருபைக்காய் நன்றி. வேதமாணிக்கம் தேசிக்கருக்கு தூதன் மூலம் கனவில் தோன்றி உம்மை வெளிப்படுத்தினது போல எனக்கும் உம்மை வெளிப்படுதினதற்க்காய் நன்றி. நானும் உமக்காய் ஊழியம் செய்து உமக்கு பிரியமாய் வாழுவேன். உமக்காய் சாதிக்க என்னை உமது கரத்தில் தருகிறேன் நல்ல பிதாவே. ஆமேன்.

- தொகுப்புக் கட்டுரை

# LIVELY HOPE OR DEAD HOPE?

"Blessed be the God and the Father of our Lord Jesus Christ which... hath begoten us again unto a lively hope by the resurrection of Jesus from the dead"
(I Peter 1:3).

Here St.Peter speaks about a lively or living hope. There are two types of hope - living hope and dead hope.

If you want to become rich, great or famous in this world, yours is a dead hope; all the hopes that you build up to become great will come to an end with your death.

What is the lively hope we get by the resurrection of Jesus Christ? "If Jesus comes when I am alive, by the grace of God I shall be changed or transformed!" Even in the matter of getting caught up at the Rapture, some people have a dead hope. They think they can never be ready if Jesus comes in their lifetime. Their miserable hope is that they must lie in the sickbed and get sanctified and die if they are to be caught up when Jesus comes. This certainly is a dead hope. Look at what St.Paul says: 'We which are alive and remain unto the Coming of the Lord... shall be caught up together with them in the clouds, to meet the Lord in the air' ( I Thess 4:15, 17). In other words, we who remain on earth and are lively i.e. those of us who live with the hope of translation or transformation will meet the Lord in the air.

Dear child of God, what type of hope do you have? Is it a lively hope or a dead hope?

"The grace of God that bringeth salvation hath appeared to all men, teaching us that denying ungodliness and worldly lusts, we should live soberly, righteously and godly in this present world, looking for that blessed hope" (Tit 2:11-13). When the grace of God fills our life, we will have a lively hope. And only those who have a lively hope can be lively Christians.

# கொல்கதா - Golgotha

மத்:27:33; மாற்:15:22; யோவா:19:17

கொல்கதா என்பது குல்கல்தா ( Gulgulta) என்ற அரமேயச் சொல்லின் ஒலியாக்கம். இதற்கு "மண்டை ஓடு" என்று பொருள். இதன் லத்தீன் மொழிபெயர்ப்பிலிருந்து "கல்வாரி" என்னும் பெயர் தோன்றியது. பல மொழிபெயர்ப்புக்களில் இப்பெயர் ஏற்க்கப்பட்டது. கொல்கதா என்றால் "மண்டை ஓடு" என்று பொருள்.

இது ஒரு மலையல்ல. ஆனால் இடம் ( It is not a Hill, but a Place). இந்த இடம் ஊருக்கு வெளியே , ஆனால் ஊருக்கு அருகே இருந்தது. தூரத்திலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய இடம் ( லூக்:23:49). நெடுஞ்சாலை அருகே இருந்தது( மத்:27:32).

இந்த இடம் மண்டை ஓடு என்று அழைக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று தொலைவிலிருந்து இதைப் பார்க்கும்போது இந்த இடம் மண்டை ஓடுபோல் தோன்றும். இரண்டாவது இது ஒரு கொலைக்களம். கொடங்குற்றவாளிகள் இங்கு கல்லெறியப்பட்டோ அல்லது சிலுவையில் அறையப்பட்டோ மரணமடைவர். அப்படி மரிப்பவர்களின் மண்டை ஓடுகள் அநேகம் இங்கு கிடந்தன. ஆதலால் இவ்விடம் "மண்டை ஓடு" - கொல்கதா - என்று அழைக்கப்பட்டது.

கி. பி. எழுபதாம் ஆண்டு யூதர்கள் எருசலேமைவிட்டுத் துரத்தப்பட்ட பின்பு இந்த இடத்தை ஒருவரும் பயன்படுத்தவில்லை. இப்போது இந்த இடத்தில் "தூய கல்லறைக் கோவில்" ( Church of Holy Sepulcher) கட்டப்பட்டுள்ளது. இது இயேசுவின் கல்லறைக்கு அருகே உள்ளது.

## ஆராதனை பாடல்கள் - மார்ச் 2017

**1-3-2017**

பா: 33 – நாற்பது நாள்

கீர்: 67 – நீயுனக்கு சொந்தமல்லவே

பா: 51 – நான் பாவிதான்

பா: 32 – இந்த அருள்

**3-3-2017**

பா: 6 – உன்னதம் ஆழம்

துதி: 64 – மாறிடா எம்

கீர்: 70 – வேறு ஜென்மம்

கீர்: 72 – எத்தனை திரள்

பா: 84 – ஆத்துமாவே உன்னை

பா: 103/2 – கர்த்தர் தந்த

**10-3-2017**

பா: 3 – ஆ கர்த்தாவே

துதி : 10 – எந்தன் கன்மலையானவரே

கீர்: 90 – தெய்வன்பின் வெள்ளமே

கீர்: 81 – விசுவாசியின் காதில்பட

பா: 81 – கர்த்தா நீர்

**17-3-2017**

பா: 2 – அலங்கார வாசலாலே

துதி: 43 – இயேசுவே உம்

கீர்: 74 – ஐயையா நான்

கீர்: 103 – என்னை ஜீவபலியாய்

பா: 85 – கர்த்தரின் மாம்சம்

பா: 12 – என்னோடிரும் மா

**24-3-1017**

பா: 49 – எவ்வண்ணமாக கர்த்தரே

துதி: 81 – எலியாவின் தேவன்

கீர்: 75 – பாதகன் என்

கீர்: 89 – எல்லாம் இயேசுவே

பா: 79 – சர்வத்தையும் அன்பாய்

**31-3-2017**

பா: 4 – ஆத்மமே உன்

கீர்: 97 – பாதம் ஒன்றே

# அருளுரை தலைப்புகள் - மார்ச் 2017

| நாள் | தலைப்பு | ப. ஏற்பாடு | நிருபம் | நற்செய்தி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03.03.2017 | சுத்திகரிக்கும் கிறிஸ்து | சகரியா:13:1-9 | 1யோவா.1:5~10 | மாற்.1:40~45 | 130 |
| 10.03.2017 | மன்னிக்கும் கிறிஸ்து | ஆதி. 4:8~16 | ரோமர்.5:6~11 | மாற்.2:1~12 | 25 |
| 17.03.2017 | ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்து | ஓசியா.2:14 ~23 | பிலேமோன்:1~21 | மத்.15:21~28 | 87 |
| 24.03.2017 | விடுவிக்கும் கிறிஸ்து | யாத்.3:1~13 | கலாத்.5:1~12 | லூக்.13:10~17 | 82 |
| 31.03.2017 | சிலுவையும், மீட்டுருவாக்கும் கிறிஸ்து | யோபு.42:10-17 | எபே.2:1-10 | மாற்.10:46-52 | 126 |